# டால்பின்®

உன்னால் முடியும்

6

புதிய பதிப்பு

## சமூக அறிவியல்

Avail

100
100
உறுதி

வரைபடப் பயிற்சிப் புத்தகம்



அரசு புதிய பாடத்திட்டத்தின்
படி விடைக் குறிப்பு அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

# டால்பின்®

## உன்னால் முடியும்

# சமூக அறிவியல்

## 6

புதிய பதிப்பு

அரசு புதிய பாடத்திட்டத்தின் படி விடைக் குறிப்பு
அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்

Avail வரைபடப்
பயிற்சிப் புத்தகம்

98653 06197 | 89256 77710 | 99435 67646
டால்பின் பப்ளிகேசன்ஸ்®
தரமே எங்களின் தாரக மந்திரம்
239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.
Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

© All Copyrights reserved

விலை : ரூ.135

# பதிப்புரை



கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. (400)

**அன்பு நிறைந்த மாணவச் செல்வங்களுக்கு வணக்கம்...**

நமது டால்பின் பப்ளிகேசன்ஸ் - சமூக அறிவியல் கையேடு உங்களை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் மிக எளிய வழிகாட்டி ஆகும். புதிய பாடத்திட்டத்தின்படி முப்பருவப் பாடத்திட்டத்தினைத் தொகுத்து ஒரே கையேடாக வெளியிட்டு உள்ளோம்.

**சிறப்பம்சங்கள்:**

- ❖ மாணவர்களுக்கு நன்கு புரியும் வகையில் எளிய நடையில் விடைகள் அமைந்துள்ளன.
- ❖ எளிமையான தெளிவான விடைகள்.
- ❖ கற்றல் விளைவுகள், கற்றல் நோக்கங்கள் இடம் பெற்றுள்ளன.
- ❖ வரைபடப் பயிற்சிக்கு தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
- ❖ மெல்ல கற்கும் மாணவர்களுக்கு எளிய விடைகள்.

தேர்வில் வெற்றி பெற வாழ்த்துகள்!

நன்றி!!!

**அன்புடன்**
**டால்பின் பப்ளிகேசன்ஸ்**

©

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

| | |
|---|---|
| அலைபேசி எண் (Mobile No) | : **9865306197 / 8925677710 / 9943567646** |
| கட்செவி எண் (Whatsapp No) | : **9345314146** |
| குறுஞ்செய்தி (Sms) | : **9345330937** |
| வலைதளம் (Website) | : **www.kalvidolphin.com** |
| மின்னஞ்சல் (E-mail ID) | : **dolphin.pub2005@gmail.com** |

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கிக் கணக்கு விவரங்கள்

G Pay **63743 17883**

**KARUR VYSYA BANK**

A/C No : 1804135000006000
IFSC CODE : KVBL0001804
BRANCH : Srivilliputtur

**CITY UNION BANK**

A/C No : 328109000204092
IFSC CODE : CIUB0000328
BRANCH : Srivilliputtur

**ICICI BANK**

A/C No : 446005500030
IFSC CODE : ICIC0004460
BRANCH : Srivilliputtur

**TAMILNADU MERCANTILE BANK**

A/C No : 328150310875103
IFSC CODE : TMBL0000328
BRANCH : Srivilliputtur

**பணம் செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் கண்டிப்பாக தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**



பொங்கல்




தீபாவளி



கிறிஸ்துமஸ்



ஓணம்



மிலாடி நபி



புத்த பூர்ணிமா

# பாடப் பொருளடக்கம்


| அலகு | பொருளடக்கம் | பக்கம் எண். | மாதம் |
| --- | --- | --- | --- |
| பருவம் - 1 | | | |
| வரலாறு | | | |
| 1. | வரலாறு என்றால் என்ன? | 2 | ஜுன் |
| 2. | மனிதர்களின் பரிணாம வளர்ச்சி | 9 | ஜுலை |
| 3. | சிந்துவெளி நாகரிகம் | 14 | ஆகஸ்ட் |
| 4. | தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள் | 23 | ஆகஸ்ட் & செப்டம்பர் |
| புவியியல் | | | |
| 1. | பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம் | 30 | ஜுன் |
| 2. | நிலப்பரப்பும் பெருங்கடல்களும் | 37 | ஜுலை & ஆகஸ்ட் |
| குடிமையியல் | | | |
| 1. | பன்முகத் தன்மையினை அறிவோம் | 44 | ஜுன் |
| 2. | சமத்துவம் பெறுதல் | 50 | ஜுலை |
| தொகுத்தறித் தேர்வு - செப்டம்பர் 2024 | | 55 | |

| அலகு | பொருளடக்கம் | பக்கம் எண். | மாதம் |
|---|---|---|---|
| **பருவம் – 2** | | | |
| **வரலாறு** | | | |
| 1. | வட இந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும் | 58 | அக்டோபர் |
| 2. | மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும் | 65 | நவம்பர் |
| 3. | குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை | 74 | நவம்பர் & டிசம்பர் |
| **புவியியல்** | | | |
| 1. | வளங்கள் | 82 | அக்டோபர் |
| **குடிமையியல்** | | | |
| 1. | தேசியச் சின்னங்கள் | 90 | அக்டோபர் |
| 2. | இந்திய அரசமைப்புச் சட்டம் | 96 | நவம்பர் |
| **பொருளியல்** | | | |
| 1. | பொருளியல் – ஓர் அறிமுகம் | 101 | நவம்பர் |
| தொகுத்தறித் தேர்வு – டிசம்பர் 2024 | | 106 | |

| அலகு | பொருளடக்கம் | பக்கம் எண். | மாதம் |
|---|---|---|---|
| **பருவம் – 3** | | | |
| **வரலாறு** | | | |
| 1. | பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும்: சங்க காலம் | 109 | ஜனவரி |
| 2. | இந்தியா – மௌரியருக்குப் பின்னர் | 115 | பிப்ரவரி |
| 3. | பேரரசுகளின் காலம்: குப்தர், வர்த்தனர் | 122 | பிப்ரவரி & மார்ச் |
| 4. | தென்னிந்திய அரசுகள் | 130 | மார்ச் & ஏப்ரல் |
| **புவியியல்** | | | |
| 1. | ஆசியா மற்றும் ஐரோப்பா | 136 | ஜனவரி |
| 2. | புவி மாதிரி | 145 | பிப்ரவரி |
| 3. | பேரிடரைப் புரிந்து கொள்ளுதல் | 151 | மார்ச் |
| **குடிமையியல்** | | | |
| 1. | மக்களாட்சி | 155 | ஜனவரி |
| 2. | உள்ளாட்சி அமைப்பு – ஊரகமும் நகர்ப்புறமும் | 159 | பிப்ரவரி |
| 3. | சாலை பாதுகாப்பு | 164 | மார்ச் |
| தொகுத்தறித் தேர்வு – 2025 | | 168 | |

# பருவம் - 1

# வரலாறு

அலகு 1

## வரலாறு என்றால் என்ன?



9FZRJ


### கற்றலின் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றுக்கொள்வதன் வாயிலாக,

- ❖ வரலாறு என்றால் என்ன என்று அறிந்துகொள்ளுதல்
- ❖ வரலாற்றின் சிறப்பைப் புரிந்துகொள்ளுதல்
- ❖ வரலாற்றுக்கு முந்தைய கால மனித இனத்தின் வாழ்வியல் முறையைத் தெரிந்துகொள்ளுதல்
- ❖ பாறை ஓவியங்கள் அவர்களின் வாழ்வியல் கூறுகளை வெளிப்படுத்துவதை அறிதல்
- ❖ வரலாறு மற்றும் வரலாற்று ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தினைத் தெரிந்துகொள்ளுதல்

### ✷ கற்றல் விளைவுகள்:

**SS609 -** *பல்வேறு வகையான சான்றுகளை (தொல்பொருள் சான்றுகள், இலக்கியச்சான்றுகள் முதலியன) அடையாளம் காணுதல், அக்கால வரலாற்றை மறுகட்டமைப்புச் செய்திட இச்சான்றுகளின் பயன்பாட்டினை விவரித்தல்.*



6th History Lesson - 1
History
வரலாறு என்றால் என்ன?
காலம்
வரலாற்றில் காலம்
வரலாற்றின் காலம் ஆண்டுகளில் கணக்கிடப்படுகிறது. இது கி.மு. (பொ.ஆ.மு.) கிறித்து பிறப்பிற்கு முன் (பொது ஆண்டிற்கு முன்) மற்றும் கி.பி. (பொ.ஆ.) கிறித்து பிறப்பிற்கு பின் (பொது ஆண்டு) எனப்படுகிறது.
2500 2000 1500 1000 500 0 500 1000 1500 2000 2500
கி.மு. (பொ.ஆ.மு.)
கி.பி. (பொ.ஆ.)
சொல்
வரலாறு என்ற சொல் கிரேக்கச் சொல்லான 'இஸ்டோரியா' (Istoria) என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் "விசாரிப்பதன் மூலம் கற்றல்" என்பதாகும்.
We Can Do It!
HISTORY
சான்றுகள்
வரலாற்றின் ஆதாரங்கள்
ARCHEOLOGY
தொல்லியல் அடையாளங்கள்
கற்கருவிகள், புதை படிமங்கள் பாறை ஓவியங்கள், எழுதப்பட்ட பதிவுகள்
பேரரசர் அசோகர்
சாஞ்சி ஸ்தூபி
சாரநாத் தூண்
History
தெளிந்து தெரிவோம்
தொழில் வேட்டையாடுதல்
HISTORY
HISTORY

## பயிற்சிகள்

### I. சரியான விடையைக் கண்டுபிடி.

1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை
   அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல் இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்
   **[ஆ) வேட்டையாடுதல்]**

---

### II. கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. சரியான விடையைக் குறியிட்டுக் காட்டுக.

1. **கூற்று** : பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும்போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.
   **காரணம்** : குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்த போது விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.
   அ) கூற்று சரி, காரணம் தவறு
   ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி
   இ) கூற்று தவறு, காரணம் சரி
   ஈ) கூற்று தவறு, காரணமும் தவறு
   **[ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி]**

---

2. பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருள்கள் அகழாய்வுகள் மூலமாகத் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. அப்பொருள்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ளப் பாதுகாக்கப்படுகின்றன. இக்கூற்றுடன் தொடர்புடையது எது?
   அ) அருங்காட்சியகங்கள்
   ஆ) புதைபொருள் படிமங்கள்
   இ) கற்கருவிகள்
   ஈ) எலும்புகள்
   **[அ) அருங்காட்சியகங்கள்]**

---

3. தவறான இணையைக் கண்டுபிடி.
   அ) பழைய கற்காலம் - கற்கருவிகள்
   ஆ) பாறை ஓவியங்கள் - குகைச் சுவர்கள்
   இ) செப்புத் தகடுகள் - ஒரு வரலாற்று ஆதாரம்
   ஈ) பூனைகள் - முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு
   **[ஈ) பூனைகள் - முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு]**

---

4. மற்ற தொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.
   அ) பாறைகள் மற்றும் குகைளில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.
   ஆ) வேட்டையாடுதலை குறிப்பதாக ஓவியங்கள் இருந்தன.
   இ) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்
   ஈ) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன
   **[ஈ) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன]**

---

## III. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பழைய கற்கால மனிதன் பெரும்பாலும் வாழ்ந்த இடங்கள் __________. [குகைகள்]
2. வரலாற்றின் தந்தை __________. [ஹெரோடோட்டஸ்]
3. பழைய கற்கால மனிதன் பழக்கிய முதல் விலங்கு __________. [நாய்]
4. கல்வெட்டுகள் __________ ஆதாரங்கள் ஆகும். [தொல்பொருள்]
5. அசோகச் சக்கரத்தில் __________ ஆரக்கால்கள் உள்ளன. [24]

## IV. சரியா? தவறா?

1. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன. [சரி]
2. பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருள்கள் தொல்லியல் துறையினரால் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. [சரி]
3. அசோகரது காலத்தில் புத்த சமயம் நாடு முழுவதும் பரவியது. [சரி]

## V. பொருத்துக.

| I | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | பாறை ஓவியங்கள் | அ) | செப்பேடுகள் | ஈ) | வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது |
| 2. | எழுதப்பட்ட பதிவுகள் | ஆ) | மிகவும் புகழ்பெற்ற அரசர் | அ) | செப்பேடுகள் |
| 3. | அசோகர் | இ) | தேவாரம் | ஆ) | மிகவும் புகழ்பெற்ற அரசர் |
| 4. | மதச் சார்புள்ள இலக்கியம் | ஈ) | வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது | இ) | தேவாரம் |

## VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும்.

1. **நாட்குறிப்பு எழுதுவதன் பயன்கள் இரண்டைக் கூறு.**
   - மக்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்களது செயல்பாடுகளையும் அறிய முடிகிறது.
   - தனிநபர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிய முடிகிறது.

2. **வரலாற்றுக்கு முந்தைய கால மக்களின் வாழ்க்கை முறையை நாம் எவ்வாறு அறிந்து கொள்கிறோம்?**
   - கற்கருவிகள்
   - புதைபடிமங்கள்
   - பாறை ஓவியங்கள் ஆகியவற்றின் மூலம் வரலாற்றுக்கு முந்தைய கால மக்களின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளலாம்.

3. **கல்வெட்டுகள் ஓர் எழுதப்பட்ட வரலாற்றுச் சான்றா?**
   - ஆம். கல்வெட்டுகள் ஓர் எழுதப்பட்ட வரலாற்றுச் சான்றாகும்.

4. **வரலாற்று தொடக்கக் காலம் (Proto History) என்றால் என்ன?**
   - வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் வரலாற்று தொடக்கக் காலம் எனப்படும்.

5. ஏதேனும் ஒரு காப்பியத்தின் பெயரை எழுதுக.

காப்பியத்தின் பெயர்கள்:

- இராமாயணம்
- சிலப்பதிகாரம்
- மணிமேகலை

## VII. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

1. வரலாறு என்றால் என்ன?
   - வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகளின் கால வரிசைப் பதிவு ஆகும்.

2. வரலாற்றுக்கு முந்தைய காலம் பற்றி எழுதுக.
   - வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது கற்கருவிகளை பயன்படுத்தியதற்கும் எழுதும் முறையை கண்டுபிடிப்பதற்கும் இடைப்பட்ட காலமாகும்.

3. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் எவை?
   - கற்கருவிகள்
   - புதை படிமங்கள்
   - பாறை ஓவியங்கள்
   - உயிரினங்களின் எஞ்சிய பகுதிகள்

4. வரலாற்றுக்கு முந்தைய காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை?
   - பிம்பேட்கா
   - பிரம்மகிரி
   - அத்திரம்பாக்கம்
   - ஆதிச்சநல்லூர்
   - லோத்தல்

5. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை?
   - முந்தைய வரலாற்று நிகழ்வுகளை அறிவதற்கான பல்வேறு வரலாற்றுத் தடயங்கள் அருங்காட்சியகத்தில் காணக்கிடைக்கின்றன.
   - நமது பண்பாடு, கலாச்சார பெருமையை பேணிக் காக்கிறது.

6. பழங்கால மனிதன் வேட்டையாடப் பயன்படுத்திய கருவிகள் சிலவற்றைக் கூறு.
   - கற்கருவிகள்
   - விலங்குகளின் கொம்புகள்.
   - எலும்புகள்
   - மரக்கிளைகள் போன்றவற்றை வேட்டையாடப் பயன்படுத்தினர்.

7. பாறைகளில் ஓவியங்கள் ஏன் வரையப்பட்டன?
   - பழங்கால மனிதர்கள் தங்களது வாழ்க்கை நிகழ்வுகளைப் பதிவு செய்ய விரும்பினர். எனவே பாறைகளில் ஓவியங்கள் வரையப்பட்டன.

8. தொல் கைவினைப் பொருட்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.
   - மட்பாண்டங்கள்
   - பொம்மைகள்

## VIII. உயர்சிந்தனை வினாக்கள்.

1. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்களுக்கு நாய் எவ்வாறு பயனுள்ளதாக இருந்தது?
   - நாய்கள் தமது கூரிய மோப்ப உணர்வினால் விலங்குகளின் வருகையை அறிந்து கொண்டு குரைத்தன.
   - இதனைக் கண்ட மனிதர்கள் நாய்களைப் பழக்கி தங்கள் பாதுகாப்பிற்காகவும், வேட்டையாடுவதற்காகவும் பயன்படுத்தினர்.

2. பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையைத் தற்கால வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுப் பார்.

| பழைய கற்கால மனிதன் | தற்கால மனிதன் |
|---|---|
| கற்கருவிகளைப் பயன்படுத்தினர். | பல உலோகங்கள் குறிப்பாக இரும்பை அதிகமாக பயன்படுத்துகின்றனர். |
| குகைகளில் வாழ்ந்தான். | வீடு கட்டி நகரங்களில் வாழ்ந்தான். |
| மரங்களின் இலைகள் – பட்டைகள் மற்றும் விலங்குகளின் தோல்கள் ஆகியவற்றை ஆடைகளாக பயன்படுத்தினர். | பருத்தி இழை, பட்டு ஆடைகளை பயன்படுத்தினர். |

## IX. மாணவர் செயல்பாடு. (மாணவர்களுக்கானது)

1. உனது குடும்பத்தில் நடந்த முக்கிய நிகழ்வுகளையும் அவை நிகழ்ந்த ஆண்டுகளையும் குறிக்கவும். ஆசிரியர் உதவியுடன் தனியாக அல்லது குழுவாக இணைந்து இந்த நிகழ்வுகளைக் காலக்கோடாக வரைந்து பார்.

2. ஆதிகால மனிதன் கற்களைக் கருவியாகப் பயன்படுத்தினான். கற்களின் பயன்களைக் காட்டும் படங்களைச் சேகரித்து ஒரு படத்தொகுப்பு தயார் செய்க.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று ஆதாரங்கள் எந்த வகையைச் சார்ந்தது.

அ) ஆதிச்சநல்லூரில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட தாழிகள்
ஆ) வேள்விக்குடி செப்பேடுகள்
இ) மகாபாரதம்
ஈ) சாஞ்சி ஸ்தூபி
உ) பட்டினப்பாலை
ஊ) கீழடியில் கிடைத்துள்ள மட்பாண்டங்கள்
எ) சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட பொம்மைகள்
ஏ) தஞ்சை பெரிய கோவில்

## X. வாழ்க்கைக் கல்வி (மாணவர்களுக்கானது)

1. **களிமண்ணைக் கொண்டு பழைய கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளின் மாதிரிகள் தயார்செய்க.**

2. **தாத்தா, பாட்டி அண்டை வீட்டுக்காரர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் உரையாடி உனது தெரு, கிராமம், நகரம் அல்லது பள்ளி இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பற்றிய செய்திகளைச் சேகரி. அதன் வரலாற்றை "நானும் ஒரு வரலாற்று ஆசிரியன்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையாக எழுதிப்பார்.**

## XI. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| அன்று மனிதர்கள் என் மீது கிறுக்கினார்கள்; வண்ணமை கொண்டு ஓவியம் வரைந்தனர். இன்று என்னை உடைத்து வீடுகள், சாலைகள் அமைக்கின்றனர். நான் யார்?<br>**விடை: பாறை** | ஏதேனும் இரு தொல்பொருள் ஆதாரங்களைக் கூறு.<br>**விடை: நாணயங்கள், கல்வெட்டுகள்** | இலக்கியச் சான்றுகளின் வகைகளைக் கூறு.<br>**விடை: மதச்சார்புள்ள இலக்கியங்கள், மதச்சார்பற்ற இலக்கியங்கள்** |
| பொ.ஆ.மு – இதன் விரிவாக்கம் என்ன?<br>**விடை: பொது ஆண்டிற்கு முன்** | 'இஸ்டோரியா' என்னும் கிரேக்கச் சொல்லுக்கு என்ன பொருள்?<br>**விடை: விசாரிப்பதன் மூலம் கற்றல்** | பொ.ஆ-இதன் விரிவாக்கம் என்ன?<br>**விடை: பொது ஆண்டு** |
| எழுத்துப் பொறிப்புகள் பற்றிய படிப்பு <u>**கல்வெட்டியல்**</u> | நாணயங்கள் பற்றிய படிப்பு <u>**நாணயவியல்**</u> | நீங்கள் பேச, பார்க்க, கேட்க, எழுத, படிக்க உதவுவேன். நானின்றி இவ்வுலகம் இல்லை. நான் யார்?<br>**விடை: கைப்பேசி** |

## XII. வரைபடம்

1. **இந்திய அரசியல் நில வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

   1. டெல்லி 2. சென்னை 3. தமிழ்நாடு
   4. ஆந்திரப் பிரதேசம் 5. கேரளா 6. கர்நாடகா

# புவியியல்



## அலகு 1

## பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம்

### கற்றலின் நோக்கங்கள்


- ❖ பேரண்டம் தோற்றம் பற்றி அறிதல்
- ❖ சூரியக் குடும்பத்தில் காணப்படும் விண்பொருள்களின் வேறுபாடுகளை அறிதல்
- ❖ புவியின் இயக்கங்களைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் புரிந்து கொள்ளல்
- ❖ புவியின் கோளங்களையும், அவற்றிற்கு இடையேயான தொடர்பினையும் கற்றல்

### ✷ கற்றல் விளைவுகள்:

**SS 601 -** *நட்சத்திரங்கள் கோள்கள் மற்றும் துணைக்கோள்களை வேறுபடுத்துதல். (எ.கா): சூரியன், பூமி மற்றும் நிலவு*

**SS 602 -** *உயிருள்ள பொருள்கள் உள்ளதால் பூமி தனித்துவமிக்க வானியல் உறுப்பு என்பதையும் உயிர்க்கோளம் அடிப்படையில் பூமிய பின் பகுதிகளை அடையாளம் காணுதல்.*

**SS 603 -** *இரவு பகல் மற்றும் பருவகாலங்களைச் செய்து காட்டுதல்.*


6th Geography Lesson - 1
பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம்
1. பேரண்டம் (Universe)
விண்மீன் திரள் மண்டலம் (Galaxy)
2. சூரியக் குடும்பம் (Solar System)
சூரியன் (The Sun)
கோள்கள் (Planets)
புதன் (Mercury) (மிக அருகிலுள்ள கோள்)
வெள்ளி (Venus) ( வெப்பமான கோள்)
புவி (Earth) (உயிர்க்கோளம்)
செவ்வாய் (Mars) (செந்நிறக் கோள்)
வியாழன் (Jupiter) (பெருங்கோள்)
சனி (Saturn) (வளையங்கள் கொண்ட கோள்)
யுரேனஸ் (Uranus) (உருளும் கோள்)
நெப்டியூன் (Neptune) (குளிர்ந்த கோள்)
குறுங்கோள்கள் (Dwarf Planets)
நிலவு (The Moon) (புவியின் துணைக்கோள்)
சிறுகோள்கள் (Asteroids)
வால் விண்மீன்கள் (Comets)
விண்கற்கள் (Meteors) மற்றும் விண்வீழ்கற்கள் (Meteorites)
3. புவியின் இயக்கம் (Motion of the Earth)
புவியின் வடிவமும், சாய்வும் (Shape and Inclination of the Earth)
சுழலுதல் (Rotation)
சுற்றுதல் (Revolution)
4. புவிக்கோளங்கள் (Spheres of the Earth)
பாறைக்கோளம் (Lithosphere)
நீர்க்கோளம் (Hydrosphere)
வளிமண்டலம் (Atmosphere)
உயிர்க்கோளம் (Biosphere)
Atmosphere
Biosphere
Geosphere
Hydrosphere

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பேரண்டம் உருவாகக் காரணமான நிகழ்வு __________. [பெருவெடிப்பு]
2. இரு வான் பொருள்களுக்கு இடையிலான தொலைவை அளக்க உதவும் அளவு __________ ஆகும். [ஒளியாண்டு]
3. சூரியக் குடும்பத்தின் மையம் __________. [சூரியன்]
4. கோள் என்ற வார்த்தையின் பொருள் __________. [சுற்றி வருபவர்]
5. அதிக துணைக்கோள்களைக் கொண்ட கோள் __________. [வியாழன்]
6. நிலவிற்கு அனுப்பப்பட்ட முதல் இந்திய விண்கலம் __________. [சந்திராயன் - 1]
7. புவியின் சாய்வுக் கோணம் __________. [$23\frac{1}{2}^{o}$]
8. நிலநடுக்கோடு சூரியனை நேராகச் சந்திக்கும் நாள்கள் __________ மற்றும் __________. [மார்ச் 21 மற்றும் செப்டம்பர் 23]
9. சூரிய அண்மை நிகழ்வின் போது புவி சூரியனுக்கு __________ ல் காணப்படும். [மிக அருகில்]
10. புவியின் மேற்பரப்பின் மீது ஒளிபடும் பகுதியையும், ஒளிபடாத பகுதியையும் பிரிக்கும் கோட்டிற்கு __________ என்று பெயர். [ஒளிர்வு வட்டம்]

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

**1. புவி தன் அச்சில் சுழல்வதை இவ்வாறு அழைக்கிறோம்.**

அ) சுற்றுதல் ஆ) பருவகாலங்கள் இ) சுழல்தல் ஈ) ஓட்டம்

**[இ) சுழல்தல்]**

**2. மகர ரேகையில் சூரியக்கதிர்கள் செங்குத்தாக விழும் நாள்**

அ) மார்ச் 21 ஆ) ஜீன் 21 இ) செப்டம்பர் 23 ஈ) டிசம்பர் 22

[ஈ) டிசம்பர் 22]

**3. சூரியக்குடும்பம் அடங்கியுள்ள விண்மீண் திரள் மண்டலம்**

அ) ஆண்டிரோமெடா ஆ) மெகலனிக் கிளவுட் (Magellanic Clouds)

இ) பால்வெளி ஈ) ஸ்டார்பர்ஸ்ட் **[இ) பால்வெளி]**

**4. மனிதன் தன் காலடியைப் பதித்துள்ள ஒரே விண்கோள்**

அ) செவ்வாய் ஆ) சந்திரன் இ) புதன் ஈ) வெள்ளி **[ஆ) சந்திரன்]**

**5. எந்த கோளால் தண்ணீரில் மிதக்க இயலும்?**

அ) வியாழன் ஆ) சனி இ) யுரேனஸ் ஈ) நெப்டியூன் **[ஆ) சனி]**

### இ) பொருந்தாததை வட்டமிடுக.

1. வெள்ளி, வியாழன், நெப்டியூன், சனி **[வெள்ளி]**
2. சிரியஸ், ஆண்டிரோமெடா, பால்வெளி, மெகலனிக்கிளவுட் **[சிரியஸ்]**
3. புளூட்டோ, ஏரிஸ், செரஸ், அயோ **[அயோ]**
4. வால் விண்மீன், சிறுகோள், விண் வீழ்கல், குறுளைக் கோள்கள் **[விண் வீழ்கல்]**
5. தரை ஊர்தி, சுற்றுக்கலம், வானூர்தி, விண்கலம் **[வானூர்தி]**

## ஈ) பொருத்துக.

| I | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | வெப்பமான கோள் | அ) | செவ்வாய் | இ) | வெள்ளி |
| 2. | வளையம் உள்ள கோள் | ஆ) | நெப்டியூன் | ஈ) | சனி |
| 3. | செந்நிறக் கோள் | இ) | வெள்ளி | அ) | செவ்வாய் |
| 4. | உருளும் கோள் | ஈ) | சனி | உ) | யுரேனஸ் |
| 5. | குளிர்ந்த கோள் | உ) | யுரேனஸ் | ஆ) | நெப்டியூன் |

## உ) (i) கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க.

1. வெள்ளிக் கோள் கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றுகிறது.
2. ஜீன் 21 ஆம் நாளன்று கடகரேகையில் சூரியக் கதிர் செங்குத்தாக விழும்.
3. செவ்வாய்க் கோளுக்கு வளையங்கள் உண்டு.

**மேற்கூறிய கூற்றுகளில் சரியானவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்திக் கண்டறிக.**

அ) 1 மற்றும் 2 ஆ) 2 மற்றும் 3 இ) 1, 2 மற்றும் 3 ஈ) 2 மட்டும்

**[அ) 1 மற்றும் 2]**

## ii) கொடுக்கப்படுள்ள கூற்றுகளை ஆராய்க.

**கூற்று 1 :** புவி, நீர்க்கோளம் என அழைக்கப்படுகிறது.

**கூற்று 2 :** புவி தன் அச்சில் சுழலுவதால் பருவ காலங்கள் ஏற்படுகின்றன.

**சரியான கூற்றினை தேர்ந்தெடுத்து எழுதுக.**

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

இ) இரண்டு கூற்றுகளும் சரி ஈ) இரண்டு கூற்றுகளும் தவறு

**[ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி]**

## ஊ) பெயரிடுக.

1. விண்மீன்களின் தொகுப்பு __________. **[விண்மீன் திரள்]**
2. சூரியக் குடும்பத்திற்கு அருகில் உள்ள விண்மீன் திரள் மண்டலம் __________. **[ஆண்ட்ரோமெடா]**
3. பிரகாசமான கோள் __________. **[வெள்ளி]**
4. உயிரினங்களை உள்ளடக்கிய கோளம் __________. **[புவி]**
5. 366 நாட்களை உடைய ஆண்டு __________. **[லீப் ஆண்டு]**

## எ) சுருக்கமான விடையளி.

**1. உட்புறக்கோள்களைப் பெயரிடுக.**

- புதன்
- வெள்ளி
- புவி
- செவ்வாய்

**2. புளூட்டோ ஒரு கோளாக தற்சமயம் கருதப்படவில்லை, காரணம் தருக.**

- புளூட்டோ பிற கோள்களைப் போல் இல்லாமல் தமது சுற்றுப்பாதையை பிற குறுங்கோள்களுடன் பகிர்ந்து கொள்கிறது. எனவே புளூட்டோ ஒரு கோளாகக் கருதப்படவில்லை.

**3. சூரிய அண்மைப்புள்ளி என்றால் என்ன?**

- சூரிய அண்மை என்பது புவி தன் சுற்றுப்பாதையில் சூரியனுக்கு மிக அருகில் வரும் நிகழ்வாகும்.

**4. ஒருவர் $20^{\circ}$ வடக்கு அட்சரேகையில் நின்றால், ஓர் ஆண்டில் சூரியன் அவரின் தலை உச்சிக்கு மேல் எத்தனை முறை வரும்?**

- இரண்டு முறை

**5. எந்த விண்பொருள் தன் சுற்றுப் பாதையை பிற விண்பொருள்களுடன் பகிர்ந்து கொள்கிறது? உதாரணம் தருக.**

- குறுங்கோள்கள் தன் சுற்றுப்பாதையை பிற கோள்களுடன் பகிர்ந்து கொள்கிறது.
- எ.கா: புளுட்டோ, செரஸ்

## ஏ. காரணம் கூறுக.

**1. யுரேனஸ் ஏன் உருளும் கோள் என அழைக்கப்படுகிறது?**

- யுரேனஸ் அச்சு மிகவும் சாய்ந்து காணப்படுவதால் தன் சுற்றுப்பாதையில் உருண்டோடுவது போன்று சூரியனைச் சுற்றி வருகிறது.

**2. நிலவின் மேற்பரப்பில் எரிமலைப் பள்ளங்கள் அதிகமாக காணப்படுகின்றன. காரணம் தருக.**

- நிலவிற்கு வளிமண்டலம் கிடையாது. இதன் காரணமாக விண்கற்களின் தாக்கத்தால் நிலவின் மேற்பகுதியில் அதிகளவில் தரைக்குழிப் பள்ளங்கள் காணப்படுகின்றன.

**3. புவியின் சுழலும் வேகம் துருவப் பகுதிகளில் சுழியமாக உள்ளது.**

- புவி கோள வடிவமாக இருப்பதால் சுழலும் வேகம் துருவப் பகுதிகளில் சுழியாக உள்ளது.

## ஐ. விரிவான விடை தருக.

**1. உட்புறக் கோள்கள் மற்றும் வெளிப்புறக் கோள்கள் - வேறுபடுத்துக.**

| உட்புறக் கோள்கள் | வெளிப்புறக் கோள்கள் |
|---|---|
| சூரியனுக்கு அருகிலுள்ள நான்கு கோள்களான புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய் ஆகியன உட்புறக் கோள்களாகும். | சூரியக் குடும்பத்திலுள்ள கடைசி நான்கு கோள்களான வியாழன், சனி, யுரேனஸ் மற்றம் நெப்டியூன் ஆகியன வெளிப்புறக் கோள்கள் |
| இவை புவி நிகர் கோள்கள் என்று அழைக்கப்படுகின்றன. | இவை வியாழன் நிகர் கோள்கள் என்று அழைக்கப்படுகின்றன. |
| இது பாறைகளால் ஆனது. | இவற்றில் மலைகள், எரிமலைகள், பள்ளங்கள் காணப்படுகின்றன. |

**2. புவியின் சுழலுதல் மற்றும் சுற்றுதல் நிகழ்வுகளால் ஏற்படும் விளைவுகள் யாவை?**

**சுழலுதல்:**

- புவி தன் அச்சில் தன்னைத் தானே சுற்றுவது சுழலுதல் எனப்படும்.
- புவி சுழலுவதன் காரணமாக இரவு பகல் ஏற்படுகிறது.

**சுற்றுதல்:**

- புவி தன் நீள் வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றிவரும் நகர்வு சுற்றுதல் எனப்படும்.
- புவி சூரியனை சுற்றி வருவதால் பருவ காலங்கள் தோன்றுகின்றன.

3. புவிக்கோளங்களின் தன்மைகள் பற்றி விவரி.


1. பாறைக்கோளம்:
   - புவியின் மேற்ப்பரப்பில் காணப்படும் பாறைகள் மற்றும் மண்ணடுக்கு ஆகும். இந்த நிலப்பரப்பில் உயிரினஙக்ள் காணப்படுகின்றன.

2. நீர்க்கோளம்:
   - இது பெருங்கடல்கள், ஆறுகள், ஏரிகளில் காணப்படும் பனியுறைகள், வளிமண்டலத்தில் காணப்படும் நீராவி ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது.

3. வளிமண்டலம்:
   - புவியைச் சுற்றி காணப்படும் பல்வேறு காற்றுத் தொகுதி வளிமண்டலமாகும். இவற்றில் நைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் முதன்மை வாயுவாகும்.

---

**ஒ. அ) கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பார்த்து விடையளிக்கவும்.**




1. சூரியனுக்கு அருகாமையில் உள்ள கோள் எது? [புதன்]
2. பெரிதான கோள் எது? [வியாழன்]
3. சூரியனிடமிருந்து தொலைவில் உள்ள கோள் எது? [நெப்டியூன்]
4. இரண்டாவது சிறிய கோள் எது? [செவ்வாய்]

---

ஆ) படத்தைப் பார்த்து பதிலளி.



1. **படத்தில் உள்ள கோளின் பெயர் என்ன?**
   யுரேனஸ்
2. **கோளின் நிறம் என்ன?**
   பச்சை
3. **இந்நிறத்திற்கான காரணம் என்ன?**
   மீத்தேன் வாயு இக்கோளில் உள்ளதால் பச்சை நிறமாகத் தோன்றுகிறது.

---

**இ) குறுக்கெழுத்து புதிர்**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 ச | ம | ப் | ப | க | லி | ர | வு | |
| | | | | | | | | | | | |
| | | | | | 2 ச | | | | | 4 வி | |
| | | | | | ந் | | | | | டி | |
| 5 பு | ளூ | ட் | டோ | | தி | | 3 ஹே | | | வெ | |
| | | | | | ரா | | லி | | | ள் | |
| | | | | | ய | | | | | ளி | |
| | 7 நெ | ப் | டி | யூ | ன் | | | | | | |
| | | | | | | | | 6 அ | | 9 செ | |
| | | | | | | | | ச் | | வ் | |
| 8 ஹை | ட் | ர | ஜ | ன் | | | | சு | | வா | |
| | | | | | | | | | | ய் | |
| | | | | | | | | | | | |

**இடமிருந்து வலம்:**

1. இரவும் பகலும் சமமாக காணப்படும் நிகழ்வு. **[சம பகலிரவு]**
5. குறுங்கோள். **[புளூட்டோ]**
7. சூரியனிடமிருந்து மிகத் தொலைவில் உள்ள கோள். **[நெப்டியூன்]**
8. சூரியனில் உள்ள வாயு. **[ஹைட்ரஜன்]**

**மேலிருந்து கீழ்:**

4. நான் காலையில் தென்படுவேன். **[விடிவெள்ளி]**
2. நிலவை ஆராய இந்தியாவால் அனுப்பப்பட்ட முதல் விண்கலம். **[சந்திராயன் 1]**
3. நான் 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றுவேன். **[ஹேலி]**
6. பூமியின் நடுவில் செல்லும் ஓர் கற்பனைக் கோடு. **[அச்சு]**
9. எனக்கு இரண்டு துணைக் கோள்கள் உண்டு. **[செவ்வாய்]**

# குடிமையியல்

## அலகு 1

## பன்முகத் தன்மையினை அறிவோம்



### கற்றலின் நோக்கங்கள்


- பன்முகத்தன்மையின் பொருளை அறிதல்
- இந்தியாவில் காணப்படும் பன்முகத்தன்மையினைப் புரிந்து கொள்ளுதல்
- நம்மை சுற்றி இருப்பவர்களுடன் நலமான அணுகுமுறையினை மேம்படுத்துதல்
- வழிபாட்டு நம்பிக்கை முறைகளில் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளுதல்
- வேற்றுமையில் ஒற்றுமை என்பதை அறிந்து அதற்கு மதிப்பளித்தல்

F0H9N

### ✷ கற்றல் விளைவுகள்:

**SS 619 -** *தம்மைச் சுற்றிக் காணப்படும் மனிதனின் பல்வேறு வகையான பன்முகத்தன்மையினை விவரித்தல்.*

**SS 620 -** *அவன்/அவளைச் சுற்றியுள்ள பல்வேறு வகையான பன்முகத்தன்மை பற்றி ஆரோக்கியமான மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுதல்.*


6th Civics Lesson - 1
பன்முகத் தன்மையினை அறிவோம்
1. பன்முகத் தன்மையினை அறிவோம்
2. இந்தியாவில் பன்முகத்தன்மை:
நில அமைப்புகள் மற்றும் வாழ்வியல் முறைகளில் பன்முகத்தன்மை
. சமூக பன்முகத்தன்மை
சார்ந்து வாழ்தல் மற்றும் சக வாழ்வு
குடும்பம் மற்றும் சமூகம்
மத பன்முகத்தன்மை
மொழிசார் பன்முகத்தன்மை
பண்பாட்டு பன்முகத்தன்மை
இந்தியாவில் புகழ்பெற்ற நடனங்கள் மற்றும் இசைகள்
3. வேற்றுமையில் ஒற்றுமை
ஜவஹர்லால் நேருவின் "டிஸ்கவரி ஆ∴ப் இந்தியா"
"இனங்களின் அருங்காட்சியகம்" என வரலாற்றாசிரியர் வி.ஏ. ஸ்மித் அவர்கள் கூறியுள்ளார்.
INDIA
Physical Features
The Discovery of India
UNITY OF INDIA

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. இந்தியாவில் __________ மாநிலங்களும், __________ யூனியன் பிரதேசங்களும் உள்ளன.
அ) 27, 9 ஆ) 29, 7 இ) 28, 7 ஈ) 28, 8 [ஈ) 28, 8]

2. இந்தியா ஒரு __________ என்று அழைக்கப்படுகிறது.
அ) கண்டம் ஆ) துணைக்கண்டம் இ) தீவு ஈ) இவற்றில் எதுவுமில்லை
[ஆ) துணைக்கண்டம்]

3. மிக அதிக மழைப்பொழிவுள்ள மௌசின்ராம் __________ மாநிலத்தில் உள்ளது.
அ) மணிப்பூர் ஆ) சிக்கிம் இ) நாகலாந்து ஈ) மேகாலயா
[ஈ) மேகாலயா]

4. கீழ்க்கண்டவற்றில் எந்த மதம் இந்தியாவில் நடைமுறையில் இல்லை?
அ) சீக்கிய மதம் ஆ) இஸ்லாமிய மதம்
இ) ஜொராஸ்ட்ரிய மதம் ஈ) கன்ஃபூசிய மதம் [ஈ) கன்ஃபூசிய மதம்]

5. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அலுவலக மொழிகளின் எண்ணிக்கை __________.
அ) 25 ஆ) 23 இ) 22 ஈ) 26 [இ) 22]

6. __________ மாநிலத்தில் ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது.
அ) கேரளா ஆ) தமிழ்நாடு இ) பஞ்சாப் ஈ) கர்நாடகா [அ) கேரளா]

7. மோகினியாட்டம் __________ மாநிலத்தின் செவ்வியல் நடனம் ஆகும்.
அ) கேரளா ஆ) தமிழ்நாடு இ) மணிப்பூர் ஈ) கர்நாடகா [அ) கேரளா]

8. “டிஸ்கவரி ஆஃப் இந்தியா” என்ற நூலினை எழுதியவர் __________.
அ) இராஜாஜி ஆ) வ.உ.சி. இ) நேதாஜி ஈ) ஜவஹர்லால் நேரு
[ஈ) ஜவஹர்லால் நேரு]

9. ‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்ற சொற்றொடரை உருவாக்கியர் __________.
அ) ஜவஹர்லால் நேரு ஆ) அம்பேத்கர் இ) மகாத்மா காந்தி ஈ) இராஜாஜி
[அ) ஜவஹர்லால் நேரு]

10. வி.ஏ.ஸ்மித் இந்தியாவை __________ என்று அழைத்தார்.
அ) பெரிய ஜனநாயகம் ஆ) தனித்துவமான பன்முகத்தன்மை கொண்ட நிலம்
இ) இனங்களின் அருங்காட்சியகம் ஈ) மதச்சார்பற்ற நாடு
[இ) இனங்களின் அருங்காட்சியகம்]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஒரு பகுதியின் __________ நடவடிக்கைகளை அப்பகுதியின் நிலவியல் கூறுகளும் காலநிலைகளும் பெரிதும் தீர்மானிக்கின்றன. [பொருளாதார]
2. மிகவும் குறைந்த மழைப்பொழிவுள்ள ஜெய்சால்மர் __________ மாநிலத்தில் உள்ளது. [ராஜஸ்தான்]
3. தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட ஆண்டு __________. [2004]
4. பிஹு திருவிழா __________ மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது. [அசாம்]

## III. பொருத்துக.

| I | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | நீக்ரிட்டோக்கள் | அ) | மதம் | ஈ) | இந்திய இனம் |
| 2. | கடற்கரை பகுதிகள் | ஆ) | இந்தியா | இ) | மீன்பிடித்தொழில் |
| 3. | ஜொராஸ்ட்ரியம் | இ) | மீன்பிடித்தொழில் | அ) | மதம் |
| 4. | வேற்றுமையில் ஒற்றுமை | ஈ) | இந்திய இனம் | ஆ) | இந்தியா |

## IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

**1. பன்முகத்தன்மையினை வரையறு.**

- நாம் பல்வேறுபட்ட பின்புலங்கள், பண்பாடுகள், வழிபாட்டு முறையைச் சார்ந்து வாழ்கிறோம். இதுவே பன்முகத்தன்மை எனப்படும்.

**2. பன்முகத்தன்மையின் வகைகள் யாவை?**

- சமூகப் பன்முகத்தன்மை
- சமயப் பன்முகத்தன்மை
- மொழிசார் பன்முகத்தன்மை
- பண்பாட்டுப் பன்முகத்தன்மை

**3. இந்தியா ஏன் துணைக்கண்டம் என்று அழைக்கப்படுகிறது?**

- கண்டம் என்பது மலைகள், பீடபூமிகள், சமவெளிகள், ஆறுகள், கடல்கள் போன்ற பல்வேறு இயற்கைப் பிரிவுகள் மற்றும் காலநிலைகளைக் கொண்ட மிகப் பரந்த நிலப்பரப்பாகும்.
- இவை அனைத்தையும் இந்தியா பெற்றிருப்பதால் இந்தியா துணைக்கண்டம் என்றழைக்கப்படுகிறது.

**4. இந்தியாவில் கொண்டாடப்படும் பல்வேறு விழாக்களில் எவையேனும் மூன்றை பற்றி எழுதுக.**

- தீபாவளி, பொங்கல்
- கிறிஸ்துமஸ்
- ரம்ஜான்

5. இந்தியாவில் புகழ்பெற்ற செவ்வியல் நடனங்களை பட்டியலிடு.

- தமிழ்நாடு – பரதநாட்டியம்
- ஆந்திரப்பிரதேசம் – குச்சிப்புடி
- கேரளா – கதகளி
- ஒடிசா – ஒடிசி
- கர்நாடகா – பக்ஷாகானம்
- மணிப்பூர் – மணிப்புரி

6. இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" நிலவும் நாடு என ஏன் அழைக்கப்படுகிறது?

- பல்வேறுபட்ட கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், மொழிகள் பல்வேறு சமய வழிபாட்டு முறைகளை சார்ந்து இருப்பினும் நாட்டுப்பற்றும் மற்றும் இந்தியர் என்ற உணர்வால் நாம் அனைவரும் ஒன்றுபட்டு இருக்கிறோம்.
- எனவே இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை நிலவும் நாடு என்றழைக்கப்படுகிறது.

## V. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி.

1. மொழிசார் பன்முகத்தன்மை மற்றும் பண்பாட்டு பன்முகத்தன்மையினை விளக்குக.

**மொழிசார் பன்முகத்தன்மை**

- இந்தியாவின் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியா 122 முக்கிய மொழிகளையும், 1599 பிற மொழிகளையும் கொண்டுள்ளது.
- தமிழ்மொழியானது பழமையான திராவிட மொழியாகும்.
- பள்ளிகள், கல்லூரிகளில் பயிற்று மொழியாகவும், அலுவலக மொழியாகவும் ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறது.

**பண்பாட்டு பன்முகத்தன்மை**

- பண்பாடு என்பது மக்களின் மொழி, உடை, உணவுமுறை, மதம், சமூகப் பழக்க வழக்கங்கள், இசை, கலை மற்றும் கட்டிடக் கலைகளின் பண்பாட்டு பன்முகத்தன்மை வெளிப்படுகிறது.

2. இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற நாடாக இருப்பினும் நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம் - விளக்குக.

- இந்தியா பன்முகத்தன்மை நிறைந்த நாடாக இருப்பினும் நாட்டுப்பற்று என்ற உணர்வால் நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம்.
- தேசியக்கொடி, தேசிய கீதம் தாய்நாட்டில் நாம் ஒற்றுமையுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.
- தேசிய விழாக்கள் நாம் அனைவரும் ஒரே நாட்டினர் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது.
- நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வால் ஒரே தேசத்தால் ஒன்றுபட்டுள்ளோம்.

## VI. செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள் (மாணவர்களுக்கானது)

1. ஒரு நில அமைப்பியல் அப்பகுதி மக்களின் தொழில்களை தீர்மானிக்கிறது. உதாரணம் மூலம் இக்கூற்றினை நிரூபி.
2. ஏதேனும் ஒரு மாநிலம் பற்றிய தகவல்களை அறிந்து, அம்மாநில மக்களின் பாரம்பரியம், பண்பாடு குறித்த தகவல்களை ஒரு புகைப்படத் தொகுப்பாக தயார் செய்க.
3. தமிழ்நாட்டின் கலை மற்றும் கட்டிடக்கலை சார்ந்த புகைப்படங்களை தொகுக்க.

---

## VII. உயர் சிந்தனை வினா

1. நம் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் கொண்டாடப்படும் விழாக்களை வரிசைப்படுத்துக.

| விழாக்கள் | | மாநிலம் |
|---|---|---|
| பொங்கல் | – | தமிழ்நாடு |
| ஓணம் | – | கேரளா |
| பிகு | – | அஸ்ஸாம் |
| உகாதி | – | கர்நாடகா |
| பைசாகி | – | ஹரியானா, பஞ்சாப் |
| கங்காவூர் | – | ராஜஸ்தான் |
| உகடி | – | கர்நாடகம் |
| பிஹு | – | அஸ்ஸாம் |

---

## VIII. வாழ்வியல் திறன்

1. உனது பள்ளியில் ஒற்றுமையை நிலை நிறுத்த மேற்கொள்ளும் பரிந்துரைகள் யாவை?
   - தினமும் பள்ளி காலை இறை வணக்க கூட்டம்.
   - ஆகஸ்ட் 15 – சுதந்திர தினம்
   - ஜனவரி – 26 குடியரசு தினம்
   - பொங்கல் – தீபாவளி – கிறிஸ்துமஸ் – ரம்ஜான் விழாக்கள்
   - கலை இலக்கிய போட்டிகள்
   - நவம்பர் 14 குழந்தைகள் தின விழா
   - செப்டம்பர் 5 ஆசிரியர் தின விழா
   - பள்ளி விளையாட்டு விழா மற்றும் ஆண்டு விழாக்கள்

## விருதுநகர் மாவட்டம்

## தொகுத்தறித் தேர்வு - செப்டம்பர் 2024

**கால அளவு : 2.00 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 60**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். 6x1=6**

1. **பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை**
   அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
   இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்
2. **சிந்துவெளி மக்கள் எந்த உலோகங்களைப் பற்றி அறிந்து இருந்தனர்?**
   அ) செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம் ஆ) செம்பு, வெள்ளி, இரும்பு, வெண்கலம்
   இ) செம்பு, தங்கம், இரும்பு, வெள்ளி ஈ) செம்பு, தங்கம், வெள்ளி, இரும்பு
3. **கீழடி அகழாய்வுகளுடன் தொடர்புடைய நகரம்**
   அ) மதுரை ஆ) காஞ்சிபுரம் இ) பூம்புகார் ஈ) ஹரப்பா
4. **மனிதன் தன் காலடியைப் பதித்துள்ள ஒரே விண்பொருள்**
   அ) செவ்வாய் ஆ) சந்திரன் இ) புதன் ஈ) வெள்ளி
5. **உறைந்த கண்டம்**
   அ) வடஅமெரிக்கா ஆ) ஆஸ்திரேலியா இ) அண்டார்டிகா ஈ) ஆசியா
6. **“டிஸ்கவரி ஆஃப் இந்தியா” என்ற நூலினை எழுதியவர் ..........**
   அ) இராஜாஜி ஆ) வ.உ.சி. இ) நேதாஜி ஈ) ஜவஹர்லால் நேரு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக. 4x1=4**

7. பாறை ஓவியங்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ......... என்னும் இடத்தில் காணப்படுகின்றன.
8. இந்தியாவில் கனிமவளம் நிறைந்த பீடபூமி .........
9. கோயில்களின் நகரம் என அழைக்கப்படுவது .........
10. சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் .........

**III. பொருத்துக. 5x1=5**

11. அசோகர் - செவ்வாய்
12. மொகஞ்சதாரோ - பசிபிக் பெருங்கடல்
13. செந்நிறக்கோள் - இறந்தோர் மேடு
14. மரியானா அகழி - இந்தியா
15. வேற்றுமையில் ஒற்றுமை - மிகவும் புகழ்பெற்ற அரசர்

**IV. சரியா? தவறா? 5x1=5**

16. முதல் எழுத்து வடிவம் சீனர்களால் உருவாக்கப்பட்டது.
17. பல்லவர்கள் காலத்தில் எண்ணற்ற குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டன.
18. **பொருந்தாததை வட்டமிடுக:**
    1. ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, இலங்கை
    2. தரை ஊர்தி, சுற்றுக்கலம், வானூர்தி, விண்கலம்
19. **பெயரிடுக:**
    உயிரினங்களை உள்ளடக்கிய கோளம் .........

20. **தவறான இணையைக் கண்டறிக:**
    அ) வடமலை - தங்கம்
    ஆ) மேற்குமலை - சந்தனம்
    இ) தென்கடல் - முத்து
    ஈ) கீழ்கடல் - அகில்

**V. ஓரிரு வார்த்தையில் விடையளி: 5x1=5**

21. ஏதேனும் ஒரு காப்பியத்தின் பெயரை எழுதுக.
22. நாம் உண்ணும் உணவில் வேக வைத்த உணவு, பச்சையான உணவு என ஒரு பட்டியலை உருவாக்குக.
23. தொண்டை நாட்டில் தொன்மையான நகரம் எது?
24. ஒரு நாட்டின் பெயரைக் கொண்டுள்ள பெருங்கடல் எது?
25. கல்வெட்டுகள் ஓர் எழுதப்பட்ட வரலாற்றுச் சான்றா?

**VI. சுருக்கமான விடையளி: (ஏதேனும் 8) 6x2=12**

26. வரலாற்றுக்கு முந்தைய காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை?
27. பரிணாமம் என்றால் என்ன?
28. தமிழகத்தின் பண்டைய நகரங்களைக் குறிப்பிடுக.
29. மனிதர்கள் ஏன் இடம்விட்டு இடம் நகர்ந்தார்கள்?
30. உட்புறக் கோள்களைப் பெயரிடுக.
31. கண்டம் என்றால் என்ன?
32. மலை - பீடபூமி வேறுபடுத்துக.
33. பன்முகத் தன்மையினை வரையறு.
34. இந்தியாவில் கொண்டாடப்படும் பல்வேறு விழாக்களில் எவையேனும் மூன்று எழுதுக.
35. பாகுபாடு என்றால் என்ன?

**VII. விரிவான விடையளி: (ஏதேனும் 3) 4x5=20**

36. **கட்டக வினா:**

| | |
|---|---|
| .......... கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு பானை செய்வதை எளிதாக்கியது. | மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு எது? .......... |
| தொடக்க கால மனிதர்களின் முதன்மையான தொழில் எது? .......... | .......... தொல்லியல் துறையுடன் தொடர்புடையது. |
| ஆயுதங்கள் செய்வதற்கு ஏற்ற கல் எது? ......... | நகரங்களும் பெருநகரங்களும் ........ மற்றும் ......... ஆகியவற்றால் தோன்றின. |

37. பெருங்குளம் பற்றி உனக்கு தெரிந்தவற்றைக் கூறு.
38. பசிபிக் பெருங்கடலின் சிறப்பம்சங்களை விளக்குக.
39. பாரபட்சத்திற்கான காரணங்களைக் கூறுக.
40. பீடபூமி பற்றிக் குறிப்பு வரைக.

**VII. இந்திய வரைபடத்தில் குறி: 4x1=4**

41. டெல்லி, மொகஞ்சதாரோ, காஞ்சிபுரம், லோத்தல்.

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

- 6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**
- 10th to 12th Std - **ELITE ENGLISH**
- 6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**
- 10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**
- 6th to 10th Std - **சமூகஅறிவியல்** (Tamil & English Medium)
- 8th to 10th Std - **அறிவியல்** (Tamil & English Medium)

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

G Pay **63743 17883**


6

புதிய பதிப்பு

# டால்பின்®

உன்னால் முடியும்

## சமூக அறிவியல்



## வரைபடப் பயிற்சிப் புத்தகம்

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

# டால்பின்®

6

உன்னால் முடியும்

# சமூகஅறிவியல்

புதிய பதிப்பு

# வரைபடப் பயிற்சிப் புத்தகம்

✆ 98653 06197 | 89256 77710 | 99435 67646
டால்பின் பப்ளிகேசன்ஸ்®
தரமே எங்களின் தாரக மந்திரம்
239, கீழப்பட்டி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.
Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.in

© All Copyrights reserved

விலை : ரூ.27

# பாடப் பொருளடக்கம்

| பயிற்சி எண் | மாதம் | பொருளடக்கம் | மதிப்பெண் | ஆசிரியர் கையொப்பம் |
|---|---|---|---|---|
| பருவம் – 1 | | | | |
| 1. | ஜீன் | வரலாறு என்றால் என்ன? | | |
| 2. | ஜீலை | மனிதர்களின் பரிணாம வளர்ச்சி | | |
| 3. | ஆகஸ்ட் | சிந்துவெளி நாகரிகம் | | |
| 4. | | சிந்துவெளி நாகரிகம் | | |
| 5. | | சிந்துவெளி நாகரிகம் | | |
| 6. | ஆகஸ்ட் & செப்டம்பர் | தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள் | | |
| 7. | ஜீலை & ஆகஸ்ட் | நிலப்பரப்பும் பெருங்கடல்களும் | | |
| 8. | | நிலப்பரப்பும் பெருங்கடல்களும் | | |

பாட ஆசிரியர் கையொப்பம்

தலைமை ஆசிரியர் கையொப்பம்

| பயிற்சி எண் | மாதம் | பொருளடக்கம் | மதிப்பெண் | ஆசிரியர் கையொப்பம் |
|---|---|---|---|---|
| **பருவம் - 2** | | | | |
| 9. | நவம்பர் & டிசம்பர் | குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை | | |
| 10. | | குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை | | |
| 11. | அக்டோபர் | வளங்கள் | | |

பாட ஆசிரியர் கையொப்பம்

தலைமை ஆசிரியர் கையொப்பம்

| பயிற்சி எண் | மாதம் | பொருளடக்கம் | மதிப்பெண் | ஆசிரியர் கையொப்பம் |
|---|---|---|---|---|
| பருவம் – 3 | | | | |
| 12. | சனவரி | பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும்: சங்க காலம் | | |
| 13. | | பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும்: சங்க காலம் | | |
| 14. | | ஆசியா மற்றும் ஐரோப்பா | | |
| 15. | | ஆசியா மற்றும் ஐரோப்பா | | |

பாட ஆசிரியர் கையொப்பம்

தலைமை ஆசிரியர் கையொப்பம்


# வரலாறு

பருவம்-1

## 1. வரலாறு என்றால் என்ன?

1. **இந்திய அரசியல் நில வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

   1. டெல்லி, 2. சென்னை, 3. தமிழ்நாடு, 4. ஆந்திர பிரதேசம், 5. கேரளா, 6. கர்நாடகா




# 1. வரலாறு என்றால் என்ன?

பருவம்-1

1. இந்திய அரசியல் நில வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

1. டெல்லி, 2. சென்னை, 3. தமிழ்நாடு, 4. ஆந்திர பிரதேசம், 5. கேரளா, 6. கர்நாடகா




# புவியியல்

பருவம்-1

## 2. நிலப்பரப்பும் பெருங்கடல்களும்


கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் கண்டங்களையும் மலைத்தொடர்களையும் குறிக்கவும்.




## 2. நிலப்பரப்பும் பெருங்கடல்களும்

பருவம்-1


கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் கண்டங்களையும் மலைத்தொடர்களையும் குறிக்கவும்.




# பயிற்சி வரைபடம்




# பயிற்சி வரைபடம்



## பயிற்சி வரைபடம்



## பயிற்சி வரைபடம்



விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

**எமது வெளியீடுகள் (STATE BOARD)**

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமூகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)

**டால்பின் பப்ளிகேசன்ஸ்**®

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

**63743 17883**